**ந.க.எண். எம்2/1293/2020**

**கொண்டலாம்பட்டி மண்டலம்**
**சேலம் மாநகராட்சி**
**நாள். 22.06.2026.**

**சேலம் மாநகராட்சி**

**பொது ஏலம்/மறு பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி & மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2023 விதி எண்316 இன் படியும் அரசாணை எண்(2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) துறை , நாள்.06.08.2024-ன் படியும் , சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்484 நாள்:25.09.2025 இல் அனுமதிக்கப்பட்டவாறு சேலம் மாநகராட்சியின் கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட **கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள** கடைகளை ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2037 வரை பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் மற்றும் குத்தகை இனங்களுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2029 வரை மூன்று ஆண்டுகளுக்கு பொது ஏலம்/ மறு பொது ஏலம் / மின்னனு ஒப்பந்தப்பள்ளி கோரப்படுகிறது. ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 07.07.2026 **ஆம் தேதி செவ்வாய்க்கிழமை** அன்று முற்பகல் 11.00 மணி வரையில் அல்லது ஒத்திபோடும் நாளில் மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி / மின்னனு ஒப்பபந்தப்புள்ளி (E-Tendering) இணையதளத்தின் மூலம் மற்றும் பகிரங்க ஏலம் மூலம் பெற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 11.30 மணிக்கு ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால், கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்தில் ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஏலத்தில் கலந்து கொள்ளவிருப்பம் உள்ளவர்கள் அட்டவணையில் கண்டுள்ள உரிம இனத்திற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள வைப்புத்தொகைக்கு வங்கி வரைவோலையாக (ஆணையாளர், சேலம்மாநகராட்சி - Commissioner. Salem City Municipal Corporation) என்ற பெயரில் வரைவோலையினை இணைத்து ஏல அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ள நாள் முதல் ஏலம் நடப்பதற்கு முதல் நாளன்று 06.07.2026 **ஆம் தேதி திங்கட்கிழமை** அன்று மாலை 4.00 மணி வரையில் அலுவலக நேரத்தில் சம்மந்தப்பட்ட வார்டு அலுவலகத்தில் செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்வதற்கான ஒப்புகை/அத்தாட்சி பெற்றுக்கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் ரொக்கம் மற்றும் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேற்படி ஏலம் கோருவதற்கு ஏலதாரர்கள்/ ஒப்பந்தப்பள்ளி கோருபவர்கள் ஏலமுன்வைப்புத்தொகை செலுத்தி அத்தாட்சி உள்ளவர்கள் மட்டுமே ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். ஒரு இனத்திற்கு செலுத்தப்பட்ட வைப்புத்தொகை மற்றும் வங்கி உத்தரவாதச் சான்று மற்ற இனத்திற்கு வைப்புத்தொகையாக எடுத்துக்கொள்ளப்படமாட்டது. மேலும், ஒரே ஏல இனத்திற்கு ஒரே ஏலதாரர் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள விரும்பினால் இரண்டிற்கும் தனித்தனியாக வைப்புத்தொகை செலுத்த வேண்டும். உச்சஏலம் / ஒப்பந்தப்புள்ளி / மின்னனு ஒப்பந்தப்புள்ளி (E-Tendering) கோரிய ஏலதாரரால் செலுத்தப்பட்ட வைப்புத்தொகை மற்றும் வங்கி உத்தரவாதச் சான்று தவிர, பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி / மின்னனு ஒப்பந்தப்புள்ளிக்கு மற்றவர்கள் செலுத்தப்பட்ட ஏலமுன்வைப்புத்தொகை மற்றும் வங்கி உத்தரவாத சான்று ஆகியவற்றை அனைத்து ஏல இனங்களுக்கான ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி / மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் முடிவுற்ற பின்னரே மற்றொரு வேலை நாளில் திருப்பிக்கொடுக்கப்படும். இதற்கு வட்டி ஏதும் கொடுக்கப்படமாட்டாது. மேற்கண்ட விவரப்படி ஒவ்வொரு இனத்திற்கும் பணம் செலுத்தியவர் அல்லது அவரது முறையான அனுமதி (நோட்டரி பப்ளிக் அத்தாட்சி) பெற்றவர் யாரோ ஒருவர் மட்டுமே ஏலத்தில் / ஒப்பந்தப்புள்ளி / மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு இனத்திற்கும் பொது ஏலம் முடிந்தவுடன் அந்த இனத்திற்கு வரபெற்ற ஒப்பந்தபுள்ளியை வருகைதந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஏலக்கேள்வி அல்லது மின்னனு ஒப்பந்தப்புள்ளி இவற்றில் எது அதிகமாக உள்ளதோ அத்தொகையை உச்சகேள்வியாக எடுத்துக்கொள்ளப்படும். ஏலம் / ஒப்பந்தப்புள்ளி / மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் 2025-2026 ஆம் ஆண்டிற்கான ஆண்டு உரிமையாணை இனங்களின் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், சிறப்புகட்டுப்பாடுகள் மற்றும் ஸ்மார்ட்சிட்டி திட்டத்தின் கீழ் சிறப்புகுழு கட்டுப்பாடுகள் ஆகியவற்றிற்கு உட்பட்டதாகும்.

இதர விவரங்களை சம்மந்தப்பட்ட வார்டு அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

மேலும், ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் மாநகராட்சிக்கு எதிராக வழக்கு தொடந்திருப்பவர்களாகவோ, மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகை, வரி, கட்டணம் போன்றவற்றில் நிலுவை வைத்திருப்பவர்களாகவோ இருத்தல் கூடாது. அவ்வாறு கண்டறியப்பட்டால் மாநகராட்சிக்கான நிலுவைத்தொகை எவ்விதத்திலும் பிடித்தம் செய்யப்படும். மேலும், கோரப்பட்ட ஏலம் தகுதி இழப்பு செய்யப்படும்.

## அட்டவணை

### கொண்டலாம்பட்டி நாளங்காடி சுங்க கட்டண வசூல்

### 2026-2027 முதல் 2028-2029 மூன்று ஆண்டுகள்

| வ. எ ண் | உரிமையாணையின் பெயர் | முன் வைப்புத் தொகை | வங்கி உத்தரவாத சான்று | வங்கி உத்தரவாத சான்றுதர இயலாதவர்கள் மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கேள்வி உறுதி செய்த பின் செலுத்த வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | கொண்டலாம்பட்டி நாளங்காடி சுங்க கட்டண வசூல் | 400000 | 200000 | 200000 | ஆண்டு முழுத்தொகையினையும் செலுத்தப்படவேண்டும். |

### திருமணி வணிக வளாக கடைகள்

| வ.எண் | உரிமையாணையின் பெயர் | அரசு மதிப்பு (மாத வாடகை) ரூ. | முன் வைப்புத் தொகை ரூ. | வங்கி உத்தரவாத சான்று ரூ. | வங்கி உத்தரவாத சான்று தர இயலாதவர்கள்மா நகராட்சிக்குசெ லுத்தப்பட வேண்டிய தொகை ரூ. | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கேள்வி உறுதி செய்தபின் செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | "A"பிளாக் முதல் தளம் -7,9,11 | மாதம் | ரூ.50000 | 25000 | 25000 | 12 மாத வாடகை |
| 2. | "B"பிளாக் முதல் தளம் -18 | மாதம் | ரூ.50000 | 25000 | 25000 | 12 மாத வாடகை |
| 3 | "C"பிளாக் தரை தளம்-23,25,27 | மாதம் | ரூ.100000 | 25000 | 25000 | 12 மாத வாடகை |
| 4. | "C"பிளாக் முதல் தளம்-28,29,30,31,32, 33,34,35.36 | மாதம் | ரூ.50000 | 25000 | 25000 | 12 மாத வாடகை |

(ஒப்பம்)xxxxxx

ஆணையாளர்
சேலம் மாநகராட்சி

/உண்மை நகல்/உத்திரவுபடி/அனுப்பப்படுகிறது /

ஆணையாளருக்காக
சேலம் மாநகராட்சி

22/06/26